13.03.2026

DVC.7/2023

RW–1. பாலமுருகன்

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வீரபெருமாள் பள்ளியில் ஓவிய ஆசிரியராக பணியாற்றி வருகிறேன் என்றால் சரிதான். நான் எனது மனைவி மீது திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் HMOP. 179/2020 என்ற விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது மனைவி இடைக்கால ஜீவனாம்ச மனு தாக்கல் செய்து அதில் நீதிமன்றம் மாதம் ரூ.7000/– இடைக்கால ஜீவனாம்ச கொடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உத்தரவுக்கு எதிராக நான் சீராய்வு மனு தாக்கல் செய்து அதில் தடை உத்தரவு பிறப்பிக்கபட்டது என்றால் சரிதான். இன்றைய நாள் வரை எனது மனைவிக்கு நான் எவ்வித ஜீவனாம்சமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் போட்ட விவாகரத்து வழக்கு கடந்த 03.03.2023ம் தேதி எனது வருகையின்மையின் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். பின்பு நான் அந்த மனுவை Restore செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு மேல் நான் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தற்போது திருமங்கலம் சார்பு நீதிமன்றத்தில் முந்தைய வழக்குகளை மறைத்து நான் புதியதாக விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எங்களுக்குள் பிரச்சினை 2019ம் வருடம் முதல் இருந்து வந்தது என்றால் 2010ம் வருடம் முதல் எங்களுக்குள் பிரச்சினை இருந்தது. எங்கள் குடும்ப பிரச்சினை சம்பந்தமாக நீதிமன்றத்திற்கு 2019ம் வருடம் தான் வந்தோம் என்றால் சரிதான். எனது இரண்டு மகன்கள் என்னுடன் தான் இருக்கிறார்கள் என்றால் சரிதான்.

எங்கள் திருமணத்தின் போது மனுதாரரின் பெற்றோர் உயிருடன் இல்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு மனுதாரர் மும்பையில் வசித்து வந்தார் என்றால் சரிதான். ஆனால் பின்பு சென்னையிலும் வசித்து

வந்தார். எனக்கும் மனுதாரருக்கும் 16 வயது வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். எனக்கு குடிப்பழக்கம் கிடையாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் எந்த தேதியில் சண்டை வந்தது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆரம்பம் முதலே எங்களுக்குள் பிரச்சினை இருந்தது அதனால் சொல்லவில்லை. திருமணத்தின் போது நான் மனுதாரருக்கு 1/2 பவுன் தாலி போட்டேன். மனுதாரருக்கு 9 பவுன் நகை போட்டார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது,. போட்டிருக்கலாம். நான் மனுதாரருடைய பழைய நகைகளை மாற்றி கூடுதலாக போட்டு புதியதாக மாற்றியுள்ளேன் என்றால் சரில்ல. எனக்கும் மனுதாரருக்கும் பிரச்சினை என்பது கவிதா என்பவரிடம் எனது மனைவி 30 ஆயிரம் கடன் வாங்கியதாலும் மனுதாரருக்கு சொந்தமான நகைகளை அவரது சகோதரருக்கு கொடுத்து உதவியதால் தான் பிரச்சினை என்றால் பிரச்சினைகளில் அதுவும் ஒன்று. மனுதாரரின் சகோதரர் கண்ணனுக்காக அடகு வைத்த நகையை நான் திருப்பிவிட்டேன்., ஆனால் பணம் கண்ணன் தரவில்லை. 2023ம் வருடம் ஏப்ரலில் மனுதாரர் சித்தி மற்றும் அவரது சகோதரர் எனது வீட்டிற்கு வந்து சமரசம் பேச வந்தார்களா என்றால் பிரச்சினை செய்ய வந்தார்கள். மனுதாரரை எதிர்மனுதாரர் வீட்டில் அனுமதிக்க கோரி பிரச்சினை செய்தார்கள். நான் மனுதாரரை அனுமதிக்க மறுத்துவிட்டேன். பிரச்சினை சம்பந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. எனது மாத சம்பளம் 65 ஆயிரம் கையில் வாங்குகிறோம். ஆனால் மொத்த சம்பளம் 1 லட்சம் ரூபாய்.

நான் தான் குடிப்பழக்கத்திற்கு ஆளாகி மனுதாரரை அடித்துக் கொடுமைப்படுத்துகிறேன் என்றால் சரியல்ல. நான் பல நபர்களை வீட்டிற்கு கூட்டி வந்து அவர்களுக்கும் உணவு பரிமாற மனுதாரரை கட்டாயப்படுத்தினேன் என்றால் சரியல்ல. அதனால் தான் மனுதாரரை அடித்து துன்புறுத்தினேன் என்றால் சரியல்ல. 2020ம் ஏப்ரல் மாதம் நான் எனது மனைவியை நேரம் சரியில்லை என்று மனுதாரரின் சகோதரரின் வீட்டிற்கு அனுப்பி வைத்தேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து மனுதாரரை சமாதானப்படுத்தி என்னுடன் வாழ அறிவுறுத்தி கொஞ்ச நாள் சென்னைக்கு சென்று வர சொன்னதின் பேரில் அனுப்பி வத்தார்கள். அந்த புகார் யார் கொடுத்தார்கள் என்றால் நான் தான் கொடுத்தேன்.

அதற்கான ரசிதுகளையும் தாக்கல் செய்துள்ளேன். மனுதாரரை ஊருக்கு அனுப்பிவிட்டு நான் மேலக்கோட்டையில் இருந்து திருமங்கலத்திற்கு நான் வீட்டை மாற்றி வந்துவிட்டேன் என்றால் தவறு. 2020ல் மேலக்கோட்டையில் அவர் தான் இருந்தார். நான் தற்போது திருமங்கலத்தில் கடந்த 4 வருடமாக குடியிருந்து வருகிறேன். தற்போது திருமங்கலத்தில் குடியிருக்கும் வீட்டில்தான் மனுதாரர் தகராறு செய்தார் என்றால் சரிதான் நான் சொன்ன மாதிரி மனுதாரர் எவ்வித பிரச்சினையும் செய்யவில்லைஎ ன்று சொன்னாலும் நல்ல குடும்பபெண்மணியாக இருந்தார் என்றாலும் நான் தான் குடிபோதையில் அடித்தேன் என்றாலும் எனது தவறான பழக்கத்திற்கு உடன்படாததாலும் மனுதாரரை அடித்து விரட்டிவிட்டேன் என்றாலும் மனுதாரர் பலமுறை என்னுடன் சேர்ந்து வாழ முயற்சி செய்தார் என்றால் சரியல்ல.

எனக்கு போதிய வருமானம் இருந்தும் எனது மனைவியை பராமரிக்க வேண்டிய கடமை இருந்தும் நான் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:DVC.7/2023**

**RW : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : **ஜெகதிஸ்வரன்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **பாலமுருகன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(மனுதாரர் ஆஜர். மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)
**(13.03.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய வழக்கினை நிரூபணம் செய்ய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள அனைத்து சங்கதிகளும் எனக்குத் தெரியும்.

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.